**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 02- (அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னெற்டறம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்) - 2019**

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்-செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை மன்னெற்றம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரன்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதிய சிஎல்கே 1008 -01 பி ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.2(எச்) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்பொதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் நுழைவுகள் மற்றும் நீர் முறைமை வினைத்திறன் நிலைபேண் தன்மையை விரிவாக்கவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் வசதி உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் 02 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்

கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | ICB-04 இன் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 8.43 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் மற்றும் ரூபா 2.81 மில்லியன் தொகையான பிடிகாசு என்பன நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், செயற்திட்டத்தின் நடைபெறும் வேலை அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | நடைபெறும் வேலை குறைத்துக் கூறல் | கணக்காய்வாளரின் சிபார்சின் அடிப்படையில் அந்த தொகை ஒப்பந்தகாரருடைய செலுத்த வேண்டிய பட்டியலிற்கான கணக்கீட்டு ஆண்டு இறுதியுடன் தொடர்புபட்டது. ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டிய தொகை உள்ள போது தொழிலாரம்பிப்பு முற்பணம் மற்றும் பிடிகாசு என்பன எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படுகின்றன என நாங்கள் இனங்காண்போம். | குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 13,691 மீற்றர்கள் குழாயில் வேலைகள் பூர்த்தியான பின்னர் காப்பற் போடுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகாணவீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிற்கு ரூபா 402.8 மில்லியன் தொகையான (பெறுமதி சேர் வரி இல்லாமல்) கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 588 மீற்றர்கள் குழாயிடல் வேலைகள் மாத்திரம் 2019 திசெம்பர் 31 வரை பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. பூர்த்தியாக்கபடாத 13,103 மீற்றர்கள் | நடைபெறும் வேலைகளின் கிரயம் அதிகரித்துக்கூறல் | சீதாவத்த – அம்பத்தல வீதிக்கு இடையில் நிரந்தர சீர்படுத்தலிற்காக (முழுமையாக இடல்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகாணவீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செய்யப்பட்ட மொத்தக் கொடுப்பனவு ரூபா 464 மில்லியனாக உள்ளது. 2019 திசெம்பர் 31 வரை 1,388.35 மீற்றர் நீளமான குழாயிடல் வேலைகள் மற்றும் 588 மீற்றர் நிரந்தர வீதி சீர்படுத்தல் என்பன | குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

குழாயிடல் வேலைகள் தொடர்பில் ஏறத்தாழ ரூபா 382.63 மில்லியனால் நடைபெறும் வேலைகளின் பெறுமதி அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

செய்யப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் நிறைவேற்றுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி பெறும் நோக்கில் குழாயிடல் நிர்மாண நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொடுப்பனவு செய்ய வேண்டும். இந்த கொடுப்பனவு வழங்கப்பட்ட ஒப்பந்த தொகையின் பகுதியாக இல்லாதிருந்த இலங்கை அரசாங்க நிதிகளிலிருந்து செய்யப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த தொகை செயற்திட்டத்திற்கான கிரயமாக உள்ளதுடன் பௌதீக முன்னேற்றத்தில் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. நாங்கள் கணக்காய்வாளர் ஆலோசனைக்கு அமைய 2020 கணக்கீட்டு ஆண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவோம்.

## 3. நிதிசார் செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது 2014 செப்தெம்பர் 29 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் இலக்குகளை அடைய தவறிய காரணத்தால் செயற்திட்ட காலப்பகுதி 2022 மே 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் முறையே 23.08 சதவீதம் மற்றும் 21.96 சதவீதமாக இருந்தன. நடவடிக்கை வாரியான பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு உள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | அலகுகள் | எதிர்பாரத்த இலக்கு | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலக்கு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | அம்பத்தளை முதல் எலியகவுஸ் நீர்த்தேக்கம் வரையான 9 கிலோமீற்றர் நுருப்பிடிக்காத இரும்பு குழாய்கள் மற்றும் உபபாகங்களை (1200 மிமீ டயாவ்) வழங்கி குழாயிடல் | | | | நிர்மாணம் தாமதப்படுவதால் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்கவதற்கு இயலாதுள்ளது. இதன் விளைவால் ஒப்பந்தம் மற்றும் செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கும் சாத்தியம் உள்ளது. | ஏஎவ்டி நிதிகள் கைதவிர்ப்பதை தற்காலிகமாக நிறுத்தியிருந்தமையால் ஒப்பந்தகாரரால் ஒப்பந்தம் நிறுத்தப் பட்டிருந்தது. பாதீட்டு ஒதுக்கீடுகள் நிடைக்காமையால் கொடுப்பனவுகள் தாமதப்பட்டிருந்தது. சகல கொடுப்பனவுகளும் திருத்தம் 01 இன் பிரகாரம் செய்யப்பட்டதுடன் 2019 நவம்பர் 25 இல் வேலைகளை பரிந்துரைத்திருந்தது. | பட்டியலிடப்பட்ட ஒப்பந்த காலப்பகுதிக்குள் வேலைகளை நிறைவேற்றுவதற்கும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு மூலம் ஒப்பந்தத்தை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | - குழாயிடல் | மீற்றர் | 9,000 | 1,388.35 | | | |
| | - ஒட்டு மொத்த ஒப்பந்த முன்னேற்றம் | சதவீதம் | 100 | 26.08 | | | |
| (ஆ) | உரிய இயலளவுடன் வினைத்திறனான பம்புகளை வழங்கி பொருத்துதல் ஊடாக சக்தியை சேமிப்பதற்காக அம்பத்தளை வசதிகளை தரமுயர்த்தி சக்தி சேமித்தல், உராய்வு குறைத்தல் ஊடாக பரிமாற்ற இழப்புக்களை | சதவீதம் | 46.10 | 19 | வினைத்திறனான பம்புகளை வழங்கி பொருத்துவதில் தாமதம் மற்றும் பரிமாற்ற இழப்புகளை குறைத்தல் மற்றும் சக்தி சேமிப்புகளை உற்பத்தி செய்தல் | செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டு இறுதியில் பாதீட்டு ஒதுக்கீடுகள் கிடைக்காமையால் முற்பணக் கொடுப்பனவுகள் தாமதப்பட்டிருந்தது. ஏஎவ்டி இன் விதிமுறை, | வினைத்திறனான பம்புகளை வழங்கி பொருத்துதல் மற்றும் உற்பத்தி வசதிகளை வழங்குவதற்கும் வேறு தொடர்புபட்ட குழாயிடல் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | குறைத்தல் மற்றும் ஏனைய உற்பத்தி வசதிகளை தரமுயர்த்தல். (ICB-05) | | | | | ஒப்பந்தகாரருடைய குறைவான செயலாற்றல் என்பன காரணமாக அவர்களால் கொடுப்பனவு தாமதப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடைய குறைவான செயலாற்றல் காரணமாக ‘‘திருத்தத்திற்கான அறிவித்தல்’’ வழங்கப்பட்டது. | |
| (இ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மேற்கத்தைய உற்பத்திக்கு இயந்திரங்கள் மற்றும் பொறிகளை வழங்குதல் (ICB - 6) | சதவீதம் | 100 | 93 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உரிய காலத்தில் உபகரணங்களை பெற்றிருக்கவில்லை . | லொட் சீ இற்கான கேள்வி மீளக் கோரப்பட்டிருந்தது, ஆனால் எவ்வித பதில்களும் பெறப்படாததுடன் ஒப்பந்தம் லொட் சீ நிறுத்தப்பட்டிருந்ததுடன் செயலாற்றல் பிணைமுறியும் காசாக்கப்பட்டிருந்தது. | லொட் சீ மற்றும் எவ் இன் கேள்விகளை தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வடிவமைப்பு மீளாய்வு மற்றும் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை சேகைள் (DRCSC) | சதவீதம் | 98.04 | 74.46 | ஒப்பந்தகாரரால் பிரதான நிபுணர்களை ஈடுபடுத்துவதில் தாமதம் நிலவியமையால் பட்டியலிடப்பட்ட செயற்திட்ட | நிர்மாண ஒப்பந்தங்களின் குறைவான முன்னேற்றம் காரணமாக பட்டியலின் பிரகாரம் நிபுணர்களின் ஒரு பகுதியினர் வேலைகளை | திருத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் பிரகாரம் வேலைகளை நிறை வேற்றுவதற்கும் நிர்மாண வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் அறிவுறுத்தல்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்பட்ட ஆலோசனை சேவை பெற முடியாதிருந்தது.<br><br>இதன் விளைவால், ஆலோசனை ஒப்பந்தம் நீடிப்பதற்கு சாத்தியம் உள்ளது. | தொடங்கியிருக்கவில்லை ல்<br><br>2019 யூன் 01 இலிருந்து ஒரு ஆண்டிற்கு ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. | வழங்கப்பட வேண்டும். |
| (உ) | 5 கிமீற்றர், 1200 மிமீ டிஐ குழாய்களை விழங்கி குழாயிடுவதுடன் கோத்தட்டுவ நீர்தேக்கம் மற்றும் பூஜ்ரர் இறைக்கும் இல்லங்கைளின் நிர்மாணம் (ICB-03) | ஒப்பந்தம் 2019 யூன் 12 இல் பரஸ்பர ரீதியாக இடை நிறுத்தப் பட்டதுடன் புதிய ஒப்பநதம் 2020 ஆகஸ்ட் 04 இல் இரண்டாவது குறைந்த கேள்வியாளருக்கு வழங்கப்பட்டது. | முந்திய ஒப்பந்தகாரருக்கான ஒப்பந்தம், ICB- 03 ஐ வழங்கும் நேரத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் சுகாதார அமைசசிற்கும் இடையிலான புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் (எம்ஓயூ) பிரகாரம் ஐடீஎச் இன் காணி நிபந்தனையடிப்படையி ல் இருந்தன.<br><br>எவ்வாறாயினும், ICB 03 ஒப்பந்த புரிந்துணர்வு இடை நிறுத்தல் நடைமுறை காரணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் | பட்டயலிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஒப்பந்த வேலைகளை பூர்த்தியாக்குவதற்கும் நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வடிகாலமைப்பச் சபை ஐடிஎச் வைத்திய சாலைக்காக 06 விடுதிகளை நிர்மாணிக்கும் கடப்பாட்டினை நிறை வேற்றுவதற்கு இயலாதிருந்தது. ஒப்பந்தத்தை வழங்குவதற்கும் ஐடிஎச் முகாமைத்துவத்திடம் இருந்து காணியை பெறுவதற்கும் இடையில் பிரச்சனை இருக்கவில்லை. இறுதியாக கோவிட் 19 நோய் தொற்று மற்றும் வேறு சுகாதார விடயங்களிற்காகவும் மேற்குறித்த நோக்கத்திற்கான காணியை விடுவிப்பதற்கு முகாமைத்துவம் நிராகரித்திருந்ததுடன் கோவிட் 19 நோய் தொற்று கரணமாக ஏற்பட்ட தாமதத்தால் 2020 ஆகஸ்ட் 04 இல் 2 ஆவது குறைந்த கேள்வியாளருக்கு ICB 03 ஒப்பந்தம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ICB

03 ஒப்பந்தம் 20 மாத ஒப்பந்த காலப் பகுதிக்காக 2020 ஆகஸ்ட் 04 இல் வழங்கப்பட்டிருந்தமை 2022 சனவரி 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருக்கும்.

## 3.2. ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | வடிவமைப்பு மீளாய்வு மற்றும் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை ஒப்பந்தம் 2015 திசெம்பரில் வழங்கப்பட்டதுடன் 2019 மே 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆலோசனை ஒப்பபந்தத்தின் நிதி மற்றும் பௌதீன முன்னேற்றம் முறையே 74.46 சதவீதம் மற்றும் 57.50 சதவீதமாக இருந்ததுடன் இது 2020 மே 31 உள்ளவாறு முறையே 84.36 சதவீதம் மற்றும் 60.52 சதவீதமாக இருந்தது. | எதிர்காலத்தில் ஆலோசனைக் கிரயம் அதிகரிப்பும். | ஆலோசனை ஒப்பந்தம் 2016.06.01 இல் தொடங்கப்பட்டிருந்தது. சர்வதேச மற்றும் உள்நாட்டு பிரதான நிபுணர்கள் நிர்மாண ஒப்பந்த பொதியின் தாமதம் காரணமாக ஆரம்ப பட்டியலின் பிரகாரம் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலைகளை நிறை வேற்றுவதற்கும் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | அம்பத்தளை முதல் எலிய கவுஸ் நீர் தேக்கம் வரையான 9 கிமீ டிஐ குழாய்கள் (1200 டயா மிமீ) வழங்கி பொருத்துதலிற்கான ஒப்பந்தம் 2016 யூலை 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் | குழாயிடல் வேலைகளின் தாமதம் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்ட | ICB -04 ஒப்பந்த உடன்படிக்கைக்கான திருத்த இல 01 ஆனது 2019 சனவரி 04 இல் கைச்சாத்திடப்பட்டது. 2019 திசெமபர் 31 இல் | குழாயிடல் வேலைகளை நிறைவேற்றுவதற்கும் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

தொடங்கிய திகதியிலிருந்து 672 நாட்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், கொடையாளரால் தற்காலிகமாக நிதி கைதவிர்ப்பு நிறுத்தப்பட்ட காரணத்தால் 2018 செப்தெம்பர் 01 இலிருந்து செயற்படும் வண்ணம் ஒப்பந்தமானது இடை நிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் திருத்தம் 01 இன் பிரகாரம், வேலைகள் 2018 மே மாதத்தில் திரும்ப தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்டதுடன் ஏழு மாதங்கள் கடந்த பின்னர் 2019 நவம்பரில் வேலைகள் திரும்ப தொடங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 26.08 சதவீதம் மற்றும் 48.64 சதவீதமாக இருந்தது. மேலும், மொத்தம் 9,000 மீற்றர் குழாயிடலில், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14.87 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 1,338.35 மீற்றர்கள் மாத்திரம் குழாயிடப் பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கப்பட்ட குழாயிடல் வேலைகளின் அமுக்க பரிசோதனை 2020 யூலை 31 வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அத்துடன் 2020 யூலை 31 இல் இது 3,347.92 மீற்றர்களாக இருந்தது. குழாயிடுகின்ற நிரந்தர வீதி சீர்படுத்தல்களின் 3,347.92 மீற்றரில் 1,019 மீற்றர்கள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

பூத்தியாக்கலை பாதகமாக பாதிக்கும்.

உள்ளவாறு ICB -04 ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 26.08 சதவீதமாக உள்ளதுடன் ICB -04 ஒப்பந்தத்தின் நிதி முன்னேற்றம் 48.64 சதவீதமாக இருந்தது. இந்த 48.64 சதவீத நிதி முன்னேற்றம் டிஐ குழாங்கள், பொருத்திகள் மற்றும் உதிர்ப்பாகங்களின் வழங்கலின் 50 சதவீதம் இறக்குமதி காரணமாக அடையப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மொத்த டிஐ குழாய்கள், பொருத்திகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்கலிற்கான பௌதீக முன்னேற்றத்தின் கீழ் நிறையிடப்பட்ட ஒதுக்கீடு 25 சதவீதமாக உள்ளது. மிகுதி 75 சதவீத வேலைகள் குழாய்கள் பொருத்துதல், அமுக்க பரிசோதனை, புதுப்பித்தல் மற்றும் வீதி சீர்படுத்தல் என்பவற்றிக்காக உள்ளன. ஆகவே, உள்ளபடியான நிதி முன்னேற்றம் பௌதீக முன்னேற்றத்தை விட உயர்வாக இருந்தது. பொதுவாக, நிரந்த வீதி சீர்படுத்தல் அமுக்க பரிசோதனையின் பின்னர் செய்யப்பட்டிருந்தது. ஆனால்,

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வீதிப் பாவணையாளர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் எழுந்த பொது மக்கள் பிரச்சனைகள் காரணமாக சில பிரிவு வீதிகளின் நிரந்தர சீர்படுத்தல் வேலைகளை ஒப்பந்தகாரர் செய்திருந்தார்.<br><br>அமுக்க பரிசோதனை பிரிவு வாரியாக (ஒரு பிரிவின் நீளம் அண்ணளவாக 1000 மீ ஆக உள்ளது) மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது. இரண்டு பிரிவுகளில் இரண்டு குழுக்கள் குழாயிடல் வேலைகள் செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்த பிரிவுகள் எதிலும் எதிர்பாராத பாதக நிலைமை காரணமாக பூத்தியாக்கப்பட முடியவில்லை. | |
| (இ) | உரிய இயலளவுடன் வினைத்திறனான பம்புகளை வழங்கி பொருத்துதல் ஊடாக சக்தியை சேமிப்பதற்காக அம்பத்தளை வசதிகளை தரமுயர்த்தி சக்தி சேமித்தல், உராய்வு குறைத்தல் ஊடாக பரிமாற்ற இழப்புக்களை குறைத்தல் மற்றும் ஏனைய உற்பத்தி வசதிகளை தரமுயர்த்தல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கிய திகதியில் இருந்து 04 ஆண்டுகள் கடந்த பின்னர் 2018 செப்தெம்பர் 13 இல் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த | செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கும் சாத்தியம் மற்றும் செயற்திட்ட கிரயம் அதிகரிக்கும் | ICB -05 ஒப்பந்தத்தின் முன்னேற்றம் விடயம் 1.3(அ) இல் வழங்கப்பட்ட காரணங்களால் குறைவாக உள்ளது. ICB- 03 மற்றும் ICB- 04 ஒப்பந்த பொதிகளும் ஒப்பந்த இடைநிறுத்தம் மற்றும் ஒப்பந்த ரீதியாக தகராறுகள் காரணமாக ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் வழமையான வழியில் செயற்படுத்துவதற்கு | பட்டியலிடப்பட்ட காலப் பகுதிக்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கும் ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பந்த பொதி ஒட்டுமொத்த செயற்திட்ட நடவடிக்கைகளிலிருந்து அளவிடப்பட்ட 45.60 சதவீதத்தை பிரதி நிதித்துவப்படுத்தகின்றது. ஒப்பந்த முன்னேற்ற அறிக்கையின் பிரகரம், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட 53.04 சதவீத பௌதீக முன்னேற்றத்திற்கு எதிராக 23.08 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருநதது. | | இயலாதிருந்தது. ஆகவே, ஒட்டுமொத்த செயற்திட்ட முன்னேற்றம் குறைவாக உள்ளது. எவ்வாறாயினும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற் திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி இலக்கு முறையு 53.04 சதவீதம் மற்றும் 23.08 சதவீதமாக திருத்தப்பட வேண்டும். | |
| (ஈ) | கெத்தட்டுவ நீர்த்தேக்கத்தின் நிர்மாணம் மற்றும் 1200 டயா மீற்றர் டிஐ குழாய்கள் வழங்கி பொருத்தலுடன் வூஸ்டர் பம்பு நிலையம் என்பவற்றின் வேலையை செயற்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரின் இயலாமையாலும் ஒப்பந்த தகராறுகள் காரணமாகவும் 2019 யூனில் பரஸபர ரீதியாக இடை நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கி திரும்ப வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்ததுடன் இரண்டாவது குறைந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதியும் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புதிய ஒப்பந்தம் 20 மாத ஒப்பந்த காலத்துடன் 2020 ஆகஸ்ட 04 இல் இரண்டாவது குறைந்த கேள்விதாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த ஒப்பந்தத்தின் கீழ் தொற்று நோயியல் வைத்தியசாலையில் (ஐடிஎச்) நீர்த்தேக்கம் மற்றும் பூஸ்டர் பம்பு நிலையம் என்பன நிர்மாணத்திற்காக | செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கும் சாத்தியம் மற்றும் எதிர்காலத்தில் செயற்திட்ட கிரயம் அதிகரிக்கும் | முந்திய ஒப்பந்தகாரருக்கு ICB- 03 ஒப்பந்த வழங்கிய நேரத்தில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் சுகாதார அமைச்சிற்கும் இடையில் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் (எம்ஓயூ) பிரகாரம் ஐடிஎச் காணி நிபந்தனை ரீரியானதாக இருந்தது. எவ்வாறாயினும், ICB- 03 ஒப்பந்தத்தின் பரஸ்பர இடைநிறுத்தல் நடைமுறை காரணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது ஐடிஎச் வைத்தியசாலைக்காக 06 விடுதிகளின் நிர்மாணக் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு இயலாதிருந்தது. ஒப்பந்தம் வழங்கும் காலத்திற்கும் | நிர்மாண வேலைகளை தொடங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

உத்தேசிக்கப்பட்ட காணிச் சுவீகரிப்பு 2013 இலிருந்து பூரணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், அம்பத்தளை வளவிலிருந்து ஐடிஎச் வளவிற்கு மேற்குறிப்பிட்ட நிர்மாணங்களை மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஐடிஎச் வைத்தியசாலை முகாமைத்துவம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை காணியை விடுவிப்பதற்கு மறுத்திருந்தது. ஆகவே, 2022 சனவரி 31 இல் ஏஎவ்டி கடன் வசதி முடிவுறுத்தப்படும் திகதிக்கு முன்னர் ஒப்பந்தம் பூத்தியதக்குவதற்கு இயலாதிருக்கும் என அவதானிக்கப்பட்டது.

ஐடிஎச் முகாமைத்திடமிருந்து காணிகளை பெறுவதற்கும் இடையில் பிரச்சனைகள் இருக்கவில்லை. இறுதியாக, கோவிட் 19 நோய் தொறறு மற்றும் வேறு சுகாதார விடயங்கள் மற்றும் கோவிட் 19 நோய் தொற்று காரணமாக ஏற்பட்ட தாமதத்தினால் 2020 ஆகஸ்ட் 04 இல் 2 ஆவது குறைந்த கேள்வியாளருக்கு ICB- 03 ஒப்பந்தம் வழங்குதல் என்பன காரணமாக மேற்குறித்த நோக்கத்திற்கான காணியை விடுவிப்பதற்கு ஐடிஎச் முகாமைத்துவம் மறுத்திருந்தது.

எவ்வாறாயினும், 20 மாத ஒப்பந்த கால பகுதியுடன் 2020 ஆயஸ்ட் 04 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டமையால் 2022 சனவரி 31 இற்கு முன்னர் ICB- 03 ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருக்கும்

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | ICB- 04 ஒப்பந்தத்தின் தகராறு இல.03 இன் படி, ஒப்பந்தகாரர் இருபுறமும் இணைக்கும் வகை மற்றும் திருத்தியமைக்கக் கூடிய வகை இணைப்புக்கள் என்பவற்றிற்காக பிணைப்பு ஒட்டும் பொருட்கள் (பசைப் பொருட்கள்) வழங்குதல் தொடர்பில் பீஓகியூ விடய இல. 3.044 இன் கீழ் ரூபா 11.64 மில்லியன் தொகை கோரியிருந்தார். எவ்வாறாயினும், பொறியியலாளர் பாதுகாப்பு பொருட்கள் வழங்குகின்ற விசேட மேவுகையல்லாத ஒப்பந்த கூற்று வகுதி 01 இன் கீழ் உட்பிரிவு இல. 03 அடிப்படையில் ஒப்பந்தகாரருடைய கோரிக்கையை மறுத்திருந்தார். எவ்வாறாயினும், ஒப்பந்த உட்பிரிவின் சந்தேகம் காரணமாக நடுவர் தீர்ப்பு சபையின் தீர்ப்பு சாதகமாக உள்ளது. ஆகவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை இருபுறமும் இணைக்கக்கூடிய வகை மற்றும் திருத்தக் கூடிய வகை பசைப் பொருட்களைா அல்லது ஆவணங்கள் தயாரிக்கும் காலத்தில் அகழக்கூடிய குழாய்களிற்காக வீதங்களில் உள்ளடங்கப்பட்ட இரண்டு வழங்கல்களின் கிரயங்களையோ விலைப் பட்டியலின் விபரங்களையோ முறையாக வழங்கியிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | ஒரே பொருட்களிற்காக இரட்டைக் கொடுப்பனவுக்கான சாத்தியம். | இந்த பசை பொருட்கள் பிரச்சனை ICB- 04 ஒப்பந்தத்தின் கீழ் வருகின்றது. எனவே, கணக்காய்வு அறிக்கை கூற்றில் திருத்தப்பட வேண்டியுள்ளது. குழாய்கள் பொருத்தும் இடம் ஒப்பந்தத்தின் வடிவமைக்கப்பட்ட வரைபடத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒப்பந்த கூற்றின் பிரகாரம். பக்க இணைப்புகளின் பாதுகாப்பு, பக்க அடப்ரர்கள், கப்புளிங், ஆரம்ப வழங்கலால் திருத்தக் கூடிய இணைப்புகள், பசைப் பொருட்கள், ஒட்டும் வகை, குறிப்பிடப்பட்டவாறு பிவீசீ அல்லது மடிக்கின்ற பொலத்தீன் கட்டர் என்பவற்றிற்கான குழியிலுள்ள குழாய்களிற்கான வீதங்கள் உள்ளடக்கப்படும். எனவே, பிஓகியூ விடயம் குழியிலுள்ள குழாய்களின் இணைப்புகளிற்கான பசைப் பொருட்கள் வழங்கலிற்காக இருக்கவில்லை. (பக்க இணைப்புகளின் பாதுகாப்பு, பக்க அடப்ரர்கள், கப்புளிங் மற்றும் திருத்தக் கூடிய இணைப்பகள், பசைப் பொருட்கள்). மேலும் பிஓகியூ விடய இல 3.044 பக்க இணைப்புகளின் பாதுகாப்பு, பக்க அடப்ரர்கள், கப்புளிங் என்பவற்றின் | எவ்வித சந்தேகஙங்களும் இல்லாமல் ஒப்பந்த உள்ளடக்கங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பசைப் பொருட்களிற்காக வழங்கப்பட்டது. எனவே, ஒப்பந்த ஆவணங்களிலுள்ள சந்தேகங்களாக இருந்ததுடன் ஒப்பந்த ஆவணங்களும் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | ரூபா 22.50 மில்லியன் தொகை நிதிக் கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ICB- 04 ஒப்பந்த உட்பிரிவுகளின் தயாரிப்பின் நெகிழ்ச்சி தொடர்பான மூன்று தகராறுகளில் நடுவர் தீர்ப்பின் தீர்மானங்களின் நடுவர்தீர்ப்புக் கட்டணமாக ரூபா 822,500 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தோடர்புபட்டிருக்காத நடவடிக்கைகளிற்காக செயற்திட்ட நிதிகளை பயன்படுத்தல் | ICB- 04 ஒப்பந்த உடன்படிக்கை / ஆவணங்களில் உள்ள நெகிழ்சி காரணமாக அந்த மூன்று பிரச்சனைகளும் உருவாகின. | TEC மற்றும் PC என்பவற்றால் கேள்வி ஆவணங்கள் அனுமதிக்கப்பட முன்னர் ஒப்பந்த உட்பிரிவுகளை தெளிவாக மதிப்பாய்வு செய்தல். |
| (இ) | மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கீழ் நிலத்தடி நீர்த்தேக்கம் மற்றும் பம்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக ஐடிஎச் வளவிள் காணித் துண்டொன்றை சுவீகரிப்பதற்காக இறைகள் மற்றும் வரிகள், அளவைக் கட்டணம் மற்றும் விளம்பரக் கட்டணம் என்பவற்றிற்காக ரூபா 2.37 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்கு சிக்கனமற்ற செலவினம் | கணக்காய்வாளரின் கூற்றுடன் உடன்படுகின்றோம் | அவசியமற்ற செலவினங்களை குறைப்பதற்கு முறைமையை விருத்தி செய்ய வேண்டும். |

**3.4 பயனற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்**

| இல | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றின் பிரகாரம், கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 70 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், கடன் காலப்பகுதியின் இறுதியில் ரூபா 2,238.85 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 13.86 மில்லியன் தொகை மாத்திரம் பயன் படுத்தப்பட்டிருந்தது. இதன் விவைால, கடன் காலப்பகுதி 80 சதவீத பயன்படுத்தப்படாது, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 255.14 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.65 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் பொது திறைசேரியால் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 2022 சனவரி 31 வரை கடன் காலப்பகுதி நிடிக்கப்பட்டமையால் எதிர்காலத்தில் மேலதிக கடப்பாட்டு கட்டணம் ஏற்படக் கூடும். | மேலதிக கடப்பாட்டுக் கட்டணம் ஏற்படக்கூடிய சாத்தியம் | செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றதின் பிரகாரம் நிதிக் கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட காரணங்களால் செயற்திட்டமானது பௌதீக முன்னேற்ற இலக்கினை அடைய முடியாதிருந்தது. இதன்படி, எதிர்பார்த்த நிதிக் கைதவிர்ப்பினை செய்ய முடியாதிருந்ததுடன் இதன் விளைவால் நிதியளிக்கும் முகவர் கடன் வசதி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு கடப்பாட்டு கட்டணத்தை சாட்டுதல் செய்தார். | வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கட்டுப்பாடுகள் நலிவாக இருக்கும் மற்றும் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் செயலாற்றலை பாதகமாக பாதிக்கும் | 2019 ஆம் நிதி ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | ஊள்ளக கணக்காய்வை மேற்கொள்வாற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

*M*